# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 06 JUNE-2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-


# தேவ சமூகத்தை எட்டிய ஜெபங்களும் மனிதனுடைய பாவங்களும்



# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சங் 40:2-ல் பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தினவர். பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலுமிருந்து நம்மை தூக்கியெடுத்தவர், இன்றைக்கும் நம்மைத் தூக்கிவிட அவர் உயிரோடு இருக்கிறார், கன்மலையின் மேல் நம்மை நிறுத்துவார். கடந்த நாட்களில் ஏப்ரல் 22,23 தேதிகளில் வால்பாறையில் நடந்த சுவிஷேச எழுப்புதல் கூட்டத்தில் கர்த்தர் அளவில்லாமல் வந்திருந்த ஜனங்களை ஆசீர்வதித்தார். அநேகர் பெலப்பட்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து மே 6,7,8 தேதிகளில் கர்நாடகா மாநிலம் **K G F**-ல் நடைபெற்ற சுவிசேஷ எழுப்புதல் கூட்டத்திலும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். சகோதரர். பால்பில்லிகிரஹாம் சிறப்பாக கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். எல்லா போதகர்களும், ஜனங்களும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். கூட்டங்கள் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. தேவகிருபையினால் நம்முடைய யூடியூப் நிகழ்ச்சிகள் எல்லாம் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது (கர்த்தாவே உன்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம், சுவிசேஷ ஒளி) இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிற நீங்கள் மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள் தேவன் அதன் மூலம் மகிமையடைவாராக. கர்த்தருக்குச் சித்தமானால் சுவிசேஷ ஒளி ஊழியப் பயிற்சி முகாம் வருகிற ஜீலை மாதத்தில் தொடங்க இருக்கிறோம். 50 பேரை தெரிந்து கொண்டு 5 நாட்கள் பயிற்சி முகாமை நடத்த இருக்கிறோம். அவர்கள் தங்குவதற்கு உறைவிடம், உணவு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். தொடர்ந்து நாங்கள் முழு பெலத்தோடும், சுகத்தோடும் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் மேலான ஜெபத்தாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தைத் தாங்க மறவாதிருங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



அன்புடன் உங்கள் சகோதரர்

L. Vincent Raj

[சகோ. L.வின்சென்ட்ராஜ்]

# தேவ சமூகத்தை எட்டிய ஜெபங்களும்
# மனிதனுடைய பாவங்களும்



சகோ. L. வின்சென்ட்ராஜ்

அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடுகிற சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது யாத் 2:23
ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நாம் வாழும் இந்த கடைசி காலத்தில் எங்கு பார்த்தாலும் கூக்குரல், வேதனையின் சத்தம், மனிதர்கள் வீதிகளில் இரங்கிப் போராடுகிறார்கள். அவர்களின் சத்தத்தை எந்த ஒரு ஆட்சியாளரும் கேட்பதாகவோ, செவிசாய்ப்பதாகவோ இல்லை. அதற்கு மாறாக அவர்களை ஒடுக்கவும், அடக்கவும் தான் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். மனிதர்களின் கூக்குரல் ஆளுகை செய்கிறவர்களுக்கு கேட்பதே இல்லை. ஆனால் இஸ்ரவேல் ஜனங்களுடைய புலம்பல், அவர்கள் எகிப்திலே பட்டபாடுகள், துயரங்கள், கூச்சல்கள் பார்வோனின் காதுகளில் கேட்டாலும், நீதி செய்யவோ இரக்கம் காட்டவோ இல்லை. இப்படிப்பட்ட இக்கட்டான, கைவிடப்பட்ட, கடினமான சூழ்நிலையில் அவர்களின் முறையிடுதல், புலம்பலின் சத்தம் தேவசமூகத்தில் எட்டினது. இன்றைக்கு நம்முடைய முறையிடுதல், வேதனையின் சத்தம் மனிதனுக்கு கேட்கிறதோ இல்லையோ, நம்முடைய கதறல் நம் கூட இருக்கின்ற மனிதனுக்கு கேடகிறதோ இல்லையோ, அது கணவனாக இருக்கலாம், மனைவியாக இருக்கலாம், கூட பிறந்தவர்களாக இருக்கலாம், நம்முடைய நண்பர்களாகவும் இருக்கலாம், இவர்களுக்கெல்லாம் நம்முடைய வேதனையின் சத்தம் கேட்கிறதோ இல்லையோ தேவனுக்கு கேட்கிறது. ஆகவேதான் ஆண்டவராகிய தேவன் சொன்னார் யாத் 3:9-ல் இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது என்றார். நம்முடைய தேவன் யார்? அவர் உயரமும்,உன்னதமுமான இடத்தில் வாசம் செய்கிறவர்,மனிதன் வானத்தையும், பூமியையும் அளவிட முடியாது.

கிழக்கிற்கும், மேற்கிற்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரத்திற்கு நம்முடைய பாவங்களை நம்மை விட்டு அகற்றி விடுகிறார். அவ்வளவு உயரமும், தூரமும் வாழுகின்ற தேவன் நம் அருகில் இருப்பவர்களை விட, நம்முடைய கூக்குரலையும், துயரங்களையும் கேட்கிறார். இன்றைக்கு பூமியிலே மனிதர்கள் எழுப்பும் கதறல்கள், கூக்குரல்கள் தேவசமுகத்திற்குப் போய் எட்டுகிறது. ஆதி 4:10-ஐ வாசித்துப் பாருங்கள் காயீன் தன் தம்பியாகிய ஆபேலை கொலை செய்து விட்டான். காரணம் அவன் தேவனுடைய அன்பைப் பெற்று விட்டான், இரக்கத்தைப் பெற்று விட்டான். இதைத் தாங்கிக் கொள்ள முடியாத காயீன் அவனைப் பகைத்துப் பொறாமை கொண்டு அவனை கொலை செய்து விட்டான். அந்த இரத்தம் என்ன செய்தது தெரியுமா? தேவனை நோக்கிக் கதறியது, முறையிட்டது, தேவசமூகத்தை வந்து எட்டியது. உன் தம்பியின் இரத்தம், கதறல் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது, முறையிடுகிறது என்றார். காரணம் அது தேவசமூகத்தை எட்டியது. மனிதனுடைய பாவத்தின் அக்கிரமம் இன்றைக்கு தேவசமூகத்தை எட்டுகிறது. அதனால் தான் பூமியில் வாதைகளும், பாடுகளும், உபத்திரவங்களும், தண்டனைகளும் உண்டாகிறது. வெளி 6:10-ஐ வாசித்துப் பாருங்கள் அவர்கள் பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். கொலை செய்யப்பட்டு, ஆண்டவருக்காக ஜீவித்தவர்களின் இரத்தம் கூக்குரலிட்டது. அவர்களின் தொகை நிறைவடைய வேண்டும் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரிகளே ஒவ்வொரு மனிதனுடைய புலம்பலும்

பெருமூச்சும், வேதனையும் இன்றைக்கு பரலோகத்தில் தேவசமூகத்தில் எட்டுகிறது. இதைத்தான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொல்லும்படி மோசேக்குச் சொன்னார். அவர்கள் கூக்குரலும், வேதனைகளும், புலம்பலும் தேவசமூகத்தை எட்டியது. அதை ஜனங்களுக்குச் சொல்ல, வெளிப்படுத்தத்தான் ஆண்டவராகிய தேவன் பூமியில் இறங்கி வந்து மோசேக்குத் தன்னை வெளிப்படுத்தினார். அதே தேவன் இன்றும் உயிரோடிருக்கிறார். யார் அவர் சமூகத்தில் போய் கதறினாலும், மனமுடைந்து அழுதாலும் அவர்கள் ஜெபத்தை, கூப்பிடுதலை கேட்கிறார். புலம்பல் 3:31,32,33-ல் ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார், அவர் சஞ்சலப்படுத்தினாலும், தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை. இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் வேதனை என்ன, பாடுகள் என்ன, உபத்திரவங்கள் என்ன, சஞ்சலம் என்ன, யாரால்? உங்களுக்கு வேதனை, போராட்டம், துக்கம் மனிதர்களால், உடன்பிறந்தவர்களால், கூட இருக்கிறவர்களானாலும் சரி. யாரும் உங்கள் குரலுக்கு, சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லையா? மனமுடைந்து தேவசமூகத்தில் முறையிடுகிறீர்களா? கதறுகிறீர்களா? உங்கள் சத்தம், உங்கள் கதறல் நிச்சயமாகவே இன்றைக்கு தேவசமூகத்தை எட்டும். உங்கள் கதறுதலின் ஜெபத்திற்கு நிச்சயமாகவே பரலோகத்திலிருந்து பதில் வரும், அற்புதம் நடக்கும். தேவன் அதனிமித்தம் உங்களுக்காக எழுந்தருளுவார். நீதி வழங்குவார். சீக்கிரத்திலே நியாயம் செய்வார். உங்களுக்கு வரவேண்டிய நன்மைகளும், ஆசீர்வாதங்களும் இனி யாராலும் தடுக்க முடியாது. உங்கள் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார். அதற்காகத்தான் அவர் உயிரோடிருக்கிறார், உங்கள் விண்ணப்பத்தைக் கேட்கிறார். போகட்டும் யார் யாருடைய கதறலை கேட்டார், எந்தெந்த காரியங்கள் தேவசமூகத்தை எட்டியது. அதற்குத் தேவன் என்ன நியாயம் செய்தார் என்பதைப் பார்ப்போம்.

**நம்முடைய ஜெபங்கள்**
**தேவ சமூகத்தை எட்டுகிறது**

உன் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்து எட்டினது என்றான்முதலாவது தேவசமூகத்தை எட்டுகிற ஒரு காரியம் என்ன தெரியுமா? ஜெபம் தான்.இன்றைக்கு ஒரு மனிதன் செய்கிற தவறு அடுத்த நிமிடமே முழுஉலகத்திற்கும் எட்டி விடுகிறது. காரணம் ஊடகங்கள், மீடியாக்கள் அதை திரும்ப திரும்ப ஒளிபரப்பு செய்து உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் சொல்லி விடுவார்கள். ஆனால் இதைக் காட்டிலும் வேகமாக ஒரு செய்தி தேவசமூகத்தை சென்றடைகிறது அது தேவபிள்ளையின் ஜெபம், பல வேளைகளில் நாம் பண்ணுகிற ஜெபத்தை நாமே மறந்து விடலாம், காரணம் அதற்குப் பதில் வரவில்லை அல்லது கிடைக்கவில்லை என்று. அதனால் நாம் விரக்தியடைந்து இனி மேலா? நமக்கு நடக்கப் போகிறது, கிடைக்கப் போகிறது என்று அந்த ஜெபத்தை விட்டுவிடுவோம், மறந்துவிடுவோம். ஆனால் தேவசமூகத்தில் ஏறெடுத்த எந்த ஜெபமும், எந்த ஒரு காரியமும் நடக்காமல் நிறைவேறாமல், போனதில்லை. அது நிறைவேறியே தீரும். காரணம் நம்முடைய ஜெபங்களும், தருமங்களும் தேவ சமூகத்தை எட்டுகிறது. இதைத்தான் லூக்கா1:13,14-ல் பார்க்கிறோம் தூதன் அவனை நோக்கி சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் என்றார். ஏறக்குறைய 50 வருடத்திற்கு முன்பாக சகரியாவும், எலிசபெத்தும் பிள்ளை இல்லாத போது தேவனை நோக்கி அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சி மன்றாடியிருப்பார்கள். இப்படி ஒரு நாள், இரண்டு நாள் அல்ல, மாதக்கணக்கில், வருடங்களாய் தேவனை நோக்கி அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சி ஜெபித்தார்கள். ஏறக்குறைய 50 வருடமாக ஒன்றும் நடக்கவில்லை சோர்ந்து போனார்கள். தேவசித்தம் எதுவானால் என்ன, இனி என்ன நடந்தால் என்ன என்று அமைதலாக, பொறுமையாக இருந்து விட்டார்கள். தேவன் எது செய்தாலும், எப்படி நடத்தினாலும் பரவாயில்லை என்று அமைதலாகிவிட்டார்கள். ஏனென்றால் நாளாகிவிட்டது, பல வருஷங்களும் ஆகிவிட்டது. அவர்கள் ஏறெடுத்த ஜெபத்தை, அவர்கள் கதறிச் சொன்ன வார்த்தைகளை அவர்களே மறந்து விட்டார்கள். ஆனால் தேவன் மறக்கவில்லை. நாம் கதறிச் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் தேவசமூகத்தில் போய் எட்டும். ஒரு நாள் வயதான காலத்தில் சகரியா ஆலயத்தில் ஆசாரிய ஊழியத்தைச் செய்கிறபோது, தூபங்காட்டுகிற போது ஆண்டவர் ஒரு தேவதூதனை அனுப்பி உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் வேண்டுதல் கேட்கப்பட்டது என்றார். என்ன வேண்டுதல்? நீ பிள்ளையில்லாமல் வெறுமையாய் இருக்கிறாய் அல்லவா அந்த வெறுமையைப் போக்க, உனக்குஅற்புதத்தைச் செய்ய இன்றைக்கு இறங்கி வந்தேன். குறித்த காலத்திலே, உற்பவ காலத்திலே எலிசபெத் ஒரு மகனைப் பெறுவாள். அவன் கர்த்தருக்கு முன்பாக நடப்பான்.

கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவான் என்றார். காரணம் சகரியாவும், எலிசபெத்தும் ஏறெடுத்த ஜெபம் பூரணமாக, நிறைவாக அவ்வளவு நாள் ஜெபிக்க வேண்டியதாயிருந்தது. சில ஜெபங்களுக்கு உடனே பதில் வந்துவிடும். அற்புதமும் நடந்துவிடும். ஆனால் சில ஜெபங்களுக்கு பதில் தாமதமாகும். காரணம் அதனுடைய நிறைவு பரிபூரணம் ஆக தாமதமாகலாம். இதைத்தான் வெளி 6:10-ல் உங்களைப் போல இரத்த சாட்சிகளாய் மரிக்க வேண்டிய உடன்ஊழியர்களின் தொகை நிறைவாகவில்லை, பரிபூரணப்படவில்லை என்றார். இவர்கள் ஜெபங்கள் தேவசமூகத்தை எட்ட அத்தனை வருஷம் தேவைப்பட்டது. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற உங்கள் ஜெபத்திற்கும் உடனே பதில் வரவில்லை என்றால் மனம் தளர வேண்டாம், மனம் பதற வேண்டாம். அது தாமதித்தாலும் நிறைவேறும். ஆபகூக் 2:3 சொல்லுகிறது குறித்தகாலத்திற்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது, முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது. அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. அது நிச்சயமாய் வரும். அது தாமதிப்பதில்லை என்று சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி ஆண்டவர் ஏற்ற காலத்திலே, முன்குறித்த காலத்திலே அவர்கள் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, விண்ணப்பத்திற்கு இறங்கி, ஜெபத்திற்குப் பதில் கொடுத்தவர் இன்றைக்கு உங்கள் ஜெபத்திற்கும் பதில் கொடுப்பார். தாமதித்தாலும் அது நிறைவேறும். வருஷங்கள் கடந்தாலும், சூழ்நிலைகள் விரோதமாக இருந்தாலும் கர்த்தருடைய கரம் குறுகிப் போகவில்லை. அவர்கள் ஜெபத்திற்கு பதிலை அற்புதமாய் கொண்டு வந்தது, அந்த ஜெபத்தின் பூரணத்தை அவர்கள் அநுபவித்தார்கள்.

## கொர்நேலியுவின் ஜெபம்

இவர் ராணுவத்தில் பணிபுரிந்த, உயர் பதவியில் இருந்த, தேவனுக்குப் பயந்து தனக்கு கீழ் பணியாற்றுகிற யாவரையும் மதித்து, நேசித்து அன்பு செய்தவர். இவருக்கு தேவன் இயேசு என்றால் யார் என்றே தெரியாது. கடவுள் யார் என்று தெரியமலே அவர் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். தானம், தர்மம் பண்ணிக் கொண்டிருந்தார்பக்தியாய் வாழ்ந்தவர் வேதம் சொல்லுகிறது சங் 4:3-ல் பக்தியுள்ளவனைக்கர்த்தர் தமக்காக தெரிந்து கொண்டார். இந்த பக்தியுள்ளவனுக்கு கர்த்தர் தம்மை வெளிப்படுத்த சித்தமானார். அவர் தம்மை வெளிப்படுத்தாமல் யாரும் தேவனை அறிந்து கொள்ள முடியாது.

இப்படி அவர் தேவன் யார் என்று அறியாமலே தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த போது கர்த்தர் ஒரு தேவதூதனை அனுப்பி தம்மை வெளிப்படுத்தினார். உன் ஜெபங்களும், தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது என்றார் அப் 10:4 அப்படி சொல்லுகிறது. எத்தனையோ மாதங்கள், எத்தனையோ வருஷங்கள் அவர் ஏறெடுத்த ஜெபங்கள் இன்றைக்கு தேவசமூகத்தை எட்டினது. அந்த ஜெபம் நிறைவடைந்து பரலோகத்தில் எட்டினது, அப்படி நிறைவான போது ஆண்டவராகிய தேவன் அந்த ஜெபத்திற்குப் பதில் கொடுக்க ஆரம்பித்தார். நடந்தது என்ன கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் இயேசுவை அறியவும், அவன் குடும்பத்தார்களும், உறவினர்களும் இரட்சிக்கப்படவும் கர்த்தர் தம்முடைய வார்த்தை அனுப்பவும், தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தவும் தேவன் பேதுருவை அவர்களிடத்திற்கு அனுப்பினார் அப்படி பேதுரு போய் பிரசங்கித்த போது தேவனுடைய வார்த்தைகளைக் கேட்ட அத்தனை பேர் மீதும் பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் இறங்கினார். கொர்நேலியுவின் ஜெபத்தின் பூரண நிறைவினால் ஆண்டவராகிய இயேசுவையும், அவருடைய பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தையும் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இன்றைக்கு இந்த பூமியில் தேவனுடைய பிள்ளைகளின் ஜெபங்கள் பரிபூரணமடைய வேண்டும். அதனுடைய நிறைவு தேவ சமூகத்தை எட்ட வேண்டும். அதற்குத்தான் நாம் இடைவிடாமல், சோர்ந்துபோகாமல் ஜெபிக்கிறோம். அதனால் தான் ஆண்டவராகிய இயேசு, அவருடைய பிள்ளைகளைப் பார்த்து லூக்கா 18:1-ல் சோர்ந்து போகாமல், மனம் தளராமல் ஜெபிக்க வேண்டும் என்று பல உவமைகளைச் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே உங்களுடைய பக்தி, பரிசுத்தம், விசுவாசம், உங்களுடைய ஜெபங்கள் பூரணமடைந்து அது தேவசமூகத்தை எட்டுவதாய் இருக்க வேண்டும். பாதியிலே நின்று விட்ட ஜெபங்களாய், பாதியிலே முடிந்து விட்ட ஜெபங்களாய், பூரணமாகாத ஜெபங்களாய் இருந்துவிடக்கூடாது. அதற்குத் தான் தேவன் எல்லாவற்றிற்கும் ஒரு பூரணத்தை வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஜெபங்கள் மாத்திரம், கதறல்கள் மாத்திரம், பெருமூச்சு மாத்திரம் தேவ சமூகத்தை எட்டி, நம்மைத் தேவனுக்கு முன்பாக நிறுத்தி குற்றமில்லாதவர்களாக, பரிசுத்தமானவர்களாக பூரணராக நிலைநிறுத்தி நம்மை தேவசமூகத்தில் உலாவுகிறவர்களாக மாற்றும் என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் ஜெபங்களை தேவசமூகத்தில் எட்டுவதாக மாற்றுவாராக.

# பாவத்தின் நிறைவு

நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி. அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது. யோனா 1:2. நினிவே ஜனத்தார் முரட்டாட்டம் உள்ளவர்கள். யாருக்கும் கட்டுப்படாதவர்கள், வணங்கா கழுத்துள்ளவர்கள், தெய்வ பயற்றவர்கள் இவர்களுடைய அக்கிரமம், பாவம், கூக்குரல் விண்ணைத்தொட்டது, தேவசமூகத்தை எட்டியது. இனி பூமியில் யாராக இருந்தாலும் சரி, எந்த ராஜாவாக இருந்தாலும், அரசாங்கமாக இருந்தாலும் அவர்கள் செய்கிற நன்மைகள் அல்லது தீமைகள் தேவசமூகத்தை எட்டிவிடும். அதைத்தான் இப்பொழுது உலகத்தில் பார்க்கிறோம். ஓட்டுப்போட்டு நல்லவர் என்று தெரிந்தெடுத்த ராஜாவையே ஜனங்கள் ஆட்சியை விட்டு, நாட்டை விட்டு துரத்துகிறார்கள். தேவனுடைய நீதி வெளிப்பட ஆரம்பித்து, இனி தீங்கு செய்கிற, அக்கிரமம் செய்கிற எந்த மனிதனுக்கும் சமாதானம் இருக்காது. ரோமர் 2:9-ல் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும், வியாகுலமும் உண்டாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. காரணம் பாவத்தின் நிறைவு, அக்கிரமத்தின் நிறைவு பூமியிலே வெளிப்பட ஆரம்பித்து விட்டது. ஆதி 18:20,21 வசனத்தின்படி பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப் போய் என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார். அந்த அக்கிரமம், பாவம் நிறைவடைந்து விட்டதா, அது பரிபூரணம் அடைந்து விட்டதா என்று பார்க்க கர்த்தர் சோதோம் கொமோராவுக்கு தேவ தூதர்களை அனுப்பினார்.இன்றைக்கு உலகில் மனிதர்களுடைய அக்கிரமமும், பாவமும், அதன் நிறைவும் தேவசமூகத்தை எட்டுகிறதாயிருக்கும். ஆகவே தேவன் பூமியிலுள்ள மனுகுலத்தை எச்சரித்துக் கொண்டிருக்கிறார். மனம் திரும்ப வாய்ப்பு கொடுத்திருக்கிறார். 2 பேதுரு 3:9-ல் தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமதுபாவத்தை விட்டு ஓட வாய்ப்புக் கொடுக்கிறார். அதனால் தான் பூமியில் இயற்கை சீற்றங்களும், கொள்ளை நோய்களும், எதிர்பாராத சேதங்களும் உண்டாகி முழுமனுக்குலத்தையும் எச்சரிக்கிறது.

அப் 8:22-ல் ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள். ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்று பேதுரு மந்திரவாதியாகிய சீமோனை எச்சரித்தார்.

உடனே அவர் தன்னைத் தாழ்த்தி நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்று தேவதண்டனைக்குத் தப்பினான், தேவகோபத்திற்குத் தப்பினான். ஆகவே தான் அவ்வப்போது மனிதனை எச்சரித்ததால் பாவத்தின் அளவை, பாவத்தின் நிறைவை குறைத்தார்கள் என்று சொல்லுகிறார். ஆதி 15:16-ஐ பாருங்கள் ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை என்றார். அதனால் தேவன் நம்மை விட்டு வைத்து, பொல்லாத வழிகளை விட்டு மனம் திரும்பி அவரை ஏற்றுக் கொள்ள வாய்ப்புக் கொடுக்கிறார். நாம் இன்னும் நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தி மனம் திரும்பாமல், பொல்லாத வழிகளை விட்டுவிடாமல் இருக்கும் போது தேவ கோபத்திற்கும், தண்டனைக்கும் தப்ப முடியாது. 1 தீமோ 5:24-ல் சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும், சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும். குறித்த காலத்திற்கு முன்பே பூமியில் அவனுக்கு நியமிக்கப்பட்ட காலத்திற்கு முன்பே சிலர் பரிதாபமாய் மரித்து விடுகிறார்கள். தேவ கோபத்திற்கு உள்ளாகி விடுகிறார்கள். காரணம் பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும் என்று வேதம் யாக்கோபு 1:15-ல் சொல்லுகிறது. இதை உணராமல், அறியாமல் இன்னும் கற்பனை உலகில், மாயை உலகில் மனிதர்கள் இவ்வுலகமே கெதி என்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள். வெளி 18:5,6-ல் அவர்களுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவர்களுடைய அநியாயங்களை தேவன் நினைவு கூர்ந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே உன்னுடைய எந்த காரியங்கள் தேவசமூகத்தில் எட்டுகிறதாய் இருக்கிறது உன் பாவமா? உன் ஜெபமா? உன் அக்கிரமங்களா அல்லது உன் நீதியா, உன் தீமையா அல்லது நீ செய்கிற நற்கிரியைகளா? எது தேவ சமூகத்தை எட்டுகிறதாய் இருக்கிறது. எது தேவசமூகத்தைப் பூரணப்படுத்தியிருக்கிறது. இன்றைக்கு அவைகளின் அளவைப் பார்க்க தேவன் இறங்கி வரப்போகிறார். உங்கள் தீமையின் அளவைக் குறைத்து, பாவத்தின் அளவைக் குறைத்து பரிசுத்தத்தின் அளவை, ஜெபத்தின் அளவை கூட்டுங்கள். அப்பொழுது கிருபையானது உங்களோடிருக்கும், தேவகரத்தினாலே பாதுகாக்கப்படுவீர்கள்.

1 தெச 2:16-ல் இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள். அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது என்ற வார்த்தையின்படி தேவன் அவர்களுக்கு நம்மை தப்புவித்து, பாதுகாத்து அவருடைய செட்டையின் கீழ் அடைக்கலம் கொடுப்பாராக. உங்களுடைய பாவம் அல்ல பரிசுத்தமும், ஜெபமும் தேவசமூகத்தை எட்டவும், அதன் நிறைவு மாத்திரமே தேவ சமூகத்திற்குப் போகவும் கிருபை செய்வாராக.

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்



# உமது சமூகத்தில் ஒரே நாள் நல்லது

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பான சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள்.

சங்கீதக்காரன் தாவீது ஆண்டவரை முழு இருதயத்தோடு தேடினவன். சங்கீதம் 84 முழுவதும் அதை பார்க்கலாம். சேனைகளின் கர்த்தாவே உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள். என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது. என் இருதயமும், என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கி கெம்பீர சத்தமிடுகிறது. என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்கு தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே. உம்முடைய வீட்டில் வாசமாயிருப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக் கொண்டிருப்பார்கள் என்று எவ்வளவாய் தேவசமூகத்தை, அவர் ஆலயத்தை வாஞ்சித்து கதறுகிறான். சங் 84:10-ல் ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது. ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன் என்கிறான். தாவீது வனாந்திரங்களில் தங்கினவன். ஆடுகளோடு ஆடாக படுத்துக்கிடந்தவன். பகலின் வெயில், இரவில் குளிர், கொடிய மிருகங்களின் அச்சுறுத்தல் இவைகளைக் கடந்தவன். பலவிதமான யுத்தங்களைச் சந்தித்தவன். அடிமட்டத்திலிருந்து உயர்ந்தவன் அரண்மனை வாழ்வில் களித்தவன். பல மனைவிகள், சேவகர்கள், கேதுரு மரத்திலான வீடு ஒரு குறையின்றி வாழ்ந்தவன். பல விதமான மேடு, பள்ளங்கள் எல்லாம் சந்தித்தவன். அவன் எத்தனையோ இடத்தில் நான் இருந்திருக்கிறேன். எத்தனையோ சூழலில் வாழ்ந்திருக்கிறேன். நான் வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்ந்ததை விட, வாழ்வதைவிட உம் இல்லத்தில், உம் சமூகத்தில் இருக்கிற அந்த ஒரே நாள் நல்லது என்கிறான். தாவீது எவ்வளவாய் ஆண்டவரின் சமூகத்தையே தெரிந்து கொள்கிறான். அதனால் தான் அவனை ஆண்டவர், தாவீது என் இருதயத்துக்கு ஏற்றவன் என்கிறார் அப் 13:22 அப்படிச் சொல்கிறது. அவர் சமூகத்தை கிட்டிச் சேர்ந்த, நாடின ஒருவரையும் ஆண்டவர் பாராட்டத் தவறவில்லை. ஆயக்காரன் எப்படி தன்னைக் கிட்டி சேர்ந்தான் என்றும் இவன்தான் எனக்கு ஏற்றவனாய் இருக்கிறான் என்றார். பரிமளத் தைலத்தை உடைத்து ஊற்றிய மரியாள் ஆண்டவரின் பாதத்தை கிட்டிச்சேர்ந்த போது இவள் என்னிடத்தில் நற்கிரியையை செய்திருக்கிறாளே என்றார். அவர் பாதத்தில் உட்கார்ந்து வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மரியாளை இவள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் என்கிறார். இப்படி ஆண்டவரின் சமூகத்தை வாஞ்சித்த ஒவ்வொருவரையும் ஆண்டவர் மேன்மைப்படுத்தினார். இந்தச் செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரியே, நீங்களும் கூட ஒவ்வொரு நாளும் வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதை விட உம் சமூகத்தில் ஒரே நாள் இருப்பது மேலானது என்று அவர் சமூகத்தை தெரிந்துகொள்வீர்களா? அவர் சமூகத்தில் செல்லும் அந்த ஒரே நாளில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

## அக்கிரமம் நீக்கப்படுகிறது

கர்த்தர் சகரியா தீர்க்கதரிசிக்கு ஒரு காரியத்தை காண்பிக்கிறார். பிரதான ஆசாரியனாயிருந்த யோசுவா கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நிற்கிறார். சாத்தான் அவரை குற்றப்படுத்தும்பொருட்டு அவரது வலது பக்கத்திலே நிற்கிறான். அப்பொழுது கர்த்தர் சாத்தானைக் கடிந்து கொண்டு, அவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளியல்லவா? என்கிறார். அப்பொழுது யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான். அப்பொழுது அவனது அழுக்கு வஸ்திரங்களை களைந்துபோட்டு அவனை நோக்கி பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து, உனக்கு சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார். தலையில் சுத்தமான பாகை வைக்கப்பட்டு சிறந்த வஸ்திரங்கள் தரிப்பிக்கப்பட்டு ஆண்டவருக்கு முன்பாக நிற்கும்

பிரதான ஆசாரியன் தான் அவன்! ஆனால் அவனிடத்தில் அழுக்கு வஸ்திரம் காணப்பட்டது. யோபு 25:5-ல் நட்சத்திரங்களும் அவர் பார்வைக்கு சுத்தமானவைகளல்ல என்று வாசிக்கிறோம். பொல்லாத உலகத்தில் வாழ்கிற நாம், ஒவ்வொரு நாளும் கறையில்லாமல் வாழ, குறைகள் நிறைந்த நாம் அவர் சமூகத்தில் இந்த ஒரு நாள் நல்லது என்று அனுதினமும் சொல்ல வேண்டும். அப்போது யோசுவாவை சுத்திகரித்தவர் நம்மையும் சுத்திகரிப்பார். அக்கினியிலிருந்து எடுக்கப்பட்ட கொள்ளியைப் பாருங்கள்! எரிந்து கொண்டிருக்கும் அக்கினியில் இன்னும் கொஞ்ச நேரம் எரிந்துவிட்டால் சாம்பலாகிவிடும். ஆனால் சாம்பலாகும் முன்னே அக்கினிக்குள் இருந்து தூக்கியெடுக்கப்பட்ட கரிக்கட்டை கொள்ளியைப் போல நாமும் அழிந்து போவதற்கு முன்னே ஆண்டவர் தூக்கியெடுக்கிறார். சகரியா 3:9-ல் யோசுவாவுக்கு முன்பாக ஒரு கல் வைக்கப்படுகிறது. அந்த கல் கிறிஸ்துவே, அவர் இந்த தேசத்தின் அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். நாம் கர்த்தருக்கு முன்பாக நின்றால், அவர் சமூகத்தில் இந்த ஒரே நாள் நல்லது என்று வாஞ்சித்தால் அந்த ஒரே நாளில் நம்முடைய அக்கிரமங்கள் நீக்கப்படுகிறது. நம் அக்கிரமங்கள் நீக்கப்பட்டு நாம் சுத்திகரிக்கப்பட்டால் சகரியா 3:7-ல் நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், இங்கே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்கு கட்டளையிடுவேன். என் ஆலயத்தில் என் பிரகாரத்தை காத்து, நியாயம் விசாரித்து இங்கே நீ என்னோடு சஞ்சரிக்கலாம் என்பதாக ஆண்டவர் சொல்கிறார். எத்தனை பாக்கியம் பாருங்கள்! தாவீது ஆண்டவரே, உமது பீடத்தில் குருவிகளுக்கு கூடும் இருக்கிறதே! எனக்கும் தாங்க என்று ஏங்கி ஜெபிக்கிறான். ஆண்டவர் உன் அக்கிரமத்தை நீக்கி என்னோடு உலாவ இடம் கட்டளையிடுவேன் என்கிறார். எப்போது? நாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு சுத்திகரிக்கப் பட்டு, அவர் வழிகளில் நடக்க நம்மை அர்ப்பணித்து, சத்துரு நுழையாமல் நமது கண்ணை, வாயை, செவியை இருதயத்தை, சிந்தையை காத்தால் நாம் தேவனோடு உலாவ இடம் கட்டளையிடுவார். இன்றே நாம் ஆண்டவருக்கு முன்னால் அவரது சமூகத்தில் ஒரு நாள் வருவோமா?



## கோல் துளிர்த்தது

நம் ஆண்டவர் பரிசுத்தர். தீமையை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன். ஒரு தீமை கூட இல்லாமல் நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். அவ்விதமாய் பரிசுத்தத்தைப் பற்றி பேசின போது சிலர் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து சபையாரெல்லாம் பரிசுத்தமானவர்கள், நீங்கள் ஏன் சும்மா எப்பப்பார்த்தாலும் பரிசுத்தம், பரிசுத்தம் என்று பேசி கர்த்தருக்கு மேலாக உங்களை உயர்த்துகிறீர்கள். எங்கள்மேல் நீ துரைத்தனம் பண்ணுவாயோ? என்று ஆரோனுக்கும், மோசேக்கும் விரோதமாக எழும்பினார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் வந்தது. ஆரோன் தூபக்கலசத்தை எடுத்துக் கொண்டு போய் தேவனிடத்தில் மன்றாடினபோது அந்த வாதை நிறுத்தப்பட்டது. எண் 17:4,5-ல் நீ ஒவ்வொரு வம்சத்திற்கும் ஒரு தலைவனின் பெயரை எழுதிய கோலை ஆசரிப்பு கூடாரத்திலே நான் உங்களைச் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப் பெட்டிக்கு முன்பாக வைக்கக்கடவாய் அப்பொழுது நான் தெரிந்து கொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும். முறுமுறுக்கிறவனுடைய முறுமுறுப்பை ஒழியப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார். அப்படியே எல்லாக் கோல்களும் தேவன் சந்திக்கும் ஸ்தானமாகிய அவர் சமூகத்தில் வைக்கப்பட்டது. 8ஆம் வசனம் சொல்கிறது மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது. அது துளிர்விட்டு பூப்பூத்து, வாதுமை பழங்களைக் கொடுத்தது. ஒரே நாளில் துளிர்க்கலாம். ஆனால் தேவன் தெரிந்து கொண்டவனின் கோல் துளிர்த்து, பூத்து பழங்களைக் கொண்டு வந்தது. இது முடியுமா? தேவனால் முடிந்ததே!. சகோதரியே, நீங்களும் ஆண்டவருக்கென்று பரிசுத்தமாய் வாழ உங்களை அர்ப்பணித்திருக்கும்போது அவர் சமூகத்தில் இருக்கிற உங்கள் வாழ்வை, பட்டமரம் போல, ஒரு கோலைப் போல இருக்கும் வாழ்வை ஒரே நாளில் துளிர்க்கவும், பூக்கவும், பழங்களைத் தரவும் தக்கதான ஆசீர்வாத வாழ்வை தேவன் காணச் செய்வார். முறுமுறுத்து, பரிசுத்தத்தை பகைக்கிற கூட்டத்தோடு அல்ல; தேவனோடு, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடைய அவர் சமூகத்தில் இந்த ஒரே நாள் நல்லது என்று உறுதியாய் நின்று கொள்ளுங்கள்.

## அழிவு மாற்றப்படுகிறது

ஆமானுக்கு முன்பாக எழுந்திருக்காத, மரியாதை செய்யாத மொர்தெகாய் நிமித்தம் அவன் இனத்தையே அழிக்க ஆமான் திட்டமிடுகிறான். ராஜ அனுமதியும் பெற்று முழு யூத இனத்தையே ஆதார் மாதமான பன்னிரெண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியாகிய

ஒரே நாளிலே சிறியோர், பெரியோர், குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும், அழித்து கொன்று நிர்மூலமாக்கவும் அவர்களை கொள்ளையிடவும் அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது. எஸ்தர் 3:13 ஆனால் எஸ்தரோ இதை கேள்விப்பட்டு ராஜ சமூகத்தில் நின்றாள். என் ஜனம் அழியக்கூடாது. ராஜாவிடத்தில் பேசினபடியால் ராஜா இரங்கி, எஸ்தர் மேல் வைத்த தயவினால் உனக்கு இஷ்டமானபடி எழுதி ராஜாவின் நாமத்தினால், அவர் மோதிரத்தால் முத்திரை போட்டு அனுப்புங்கள். அதை செல்லாமற் போகப்பண்ண ஒருவராலும் முடியாது என்றான். அப்படியே எஸ்தரும், மொர்தெகாயும் எந்தெந்த நாடுகளுக்கு யூத இனம் அழிக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே ஆமானால் அனுப்பப்பட்டிருந்ததோ அந்த எல்லா நாடுகளிலும் ஆதார் மாதம் என்கிற பன்னிரெண்டாம் மாதம் பதின்மூன்றாம் தேதியாகிய அந்த ஒரே நாளிலே அந்தந்த பட்டணத் திலிருக்கிற யூதர் ஒன்றாய் சேர்ந்து தங்கள் பிராணனை காப்பாற்றவும், தங்கள் விரோதிகளை அழித்து கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடைமைகளை கொள்ளையிடவும் ராஜா யூதருக்கு கட்டளையிட்டார் என்று எழுதி அனுப்பினார்கள். எந்த நாளில் அழியப்போகிறோம், அவ்வளவுதான் என்று நினைத்தார்களோ அதே நாளில் எதிரிகள் அழிந்தார்கள். இவர்களோ வாழ்ந்து சுகித்தார்கள். கலங்கின சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. காரணம் எஸ்தர் அவர் சமூகத்தில் நின்ற ஒரே நாள். தீர்ப்பை மாற்றி ஒரே நாளில் காரியம் மாறுதலாய் முடிந்தது. சகோதரியே தைரியமாய் கிருபாசனத்தண்டை சேருங்கள். ஆமான் எவ்வளவு கொட்டங்களை கொண்டு வந்தாலும் பயப்படாமல் ராஜ சமூகத்தில் போய் உம் சமூகத்தில் இந்த ஒரு நாள் நல்லது என்று நில்லுங்கள். அவர் சமூகத்தில் நீங்கள் ஏறெடுக்கும் ஜெபம் மேலானது. அழிவு நியமிக்கப்பட்ட ஒன்றாயிருந்தாலும், அந்த அழிவை, தீமையை, நிந்தையை, அவமானத்தை மாற்றக்கூடியது. அந்தபக்கம் எதிரிகள். இந்தப்பக்கம் யூதர்கள் ஒரே நாளில் அவர்கள் அழிப்பார்கள் என்றிருந்தபோது, யூதர்கள் அவர்களை அழித்து விட்டார்கள். 1 இரா 20:29-ல் இஸ்ரவேலரும், சீரியரும் ஏழுநாளளவும் ஒருவர் முகத்துக்கு எதிராய் முகமுகமாய் பாளயமிறங்கி இருந்தார்கள். கடைசியாய் யுத்தம் கலந்த இஸ்ரவேல் புத்திரர் ஒரே நாளிலே சீரியரின் லட்சம் காலாட்களை மடங்கடித்தார்கள். சகோதரியே, உங்கள் முகத்திற்கு முன்பாக பாளயமிறங்கி இருக்கிற எதிரிகளுக்கு பயப்படாதிருங்கள். இயேசுவின் சமூகத்தில் உங்களை தாழ்த்தி நில்லுங்கள் நீங்கள் முறியடிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக நீங்கள் அவர்களை முறியடிப்பீர்கள்.

## எழுப்புதல் ஏற்படுகிறது

எசேக்கியேல் தீர்க்கதரிசி எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்குகளில் நின்றபோது நம்பிக்கையே இல்லை. இது உயிரடையுமா? எனக்கு தெரியவில்லை தேவனே, நீர் அறிவீர். என்றார். ஆனால் பலமும் அல்ல; பராக்கிரமும் அல்ல; என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். சக 4:6-ன் படி ஆவியானவர் இறங்கி வருகிறபோது எல்லா எலும்புகளும் ஜீவன் பெற்று காலுன்றி நின்றது. இஸ்ரேல் பிரயாணம் சென்றபோது எகிப்தில் சீனாய் மலை அடிவாரத்தில் தங்கினோம். அப்போது நான் ஆண்டவரே, எகிப்தில் வறுமையில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். இஸ்ரேலில் நீர் வந்திருந்தும் அதை அறியாத மக்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். எத்தனை நாடுகள், எத்தனை மக்கள் இருக்கிறார்கள். ஒரே நாளில் எல்லாரையும் நீர் சந்தித்து இரட்சிக்கலாமே என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் ஏசா 66:8-ல் ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப்பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்க பிறக்குமோ? சீயோனோவெனில் ஒருமிக்க வேதனைப்பட்டும் தன் குமாரரை பெற்றும் இருகிறது என்ற வசனத்தை ஆண்டவர் ஞாபகப்படுத்தினார். நான் ஒரே நாளில் இரட்சிக்க ஆயத்தம். ஆனால் பிரசவ வேதனைப்படத்தான் ஆளில்லை என்பதாக ஆண்டவர் பேசினார். ஆண்டவரே, என்னை ஜெப ஆவியால் ஆத்தும பாரத்தால் நிரப்பும். நான் வேதனைப்பட்டு குமாரர்களை, குமாரத்திகளை பிறப்பிக்கட்டும் என்று சொன்னேன். வரப்போகும் எழுப்புதல் ஆவியானவரால், சீயோனின் பிரசவ வேதனையினால் ஒருமிக்க ஒரே நாளில் தேசங்கள் பிறப்பிக்கப்போகிறது. மந்தை மந்தையாய், கூட்டங்கூட்டமாய் இயேசுவண்டை ஜனங்கள் ஓடி வரப்போகிறார்கள். அதற்கு நீங்களும் நானும் அவர் சமூகத்தில் இந்த ஒரேநாள் நல்லது என்று நின்று கொள்ள வேண்டும். வீணாய் எங்கு, எதில் நம் நேரம் போகிறதோ அதிலிருந்து நேரத்தை பிடுங்கி எடுத்து ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைக் காட்டிலும் என் தேவனுடைய ஆலயத்தில் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ள வேண்டும் சங்கீதக்காரன் சொன்னது போல அவரோடு இசைந்து கொள்ளுங்கள். அக்கிரமம் நீக்கப்படும், சுகவாழ்வு துளிர்க்கும், தேசங்கள் மாறும், மாபெரும் ஆசீர்வாதம் வரும், என் ஆண்டவரின் மாறாத பிரசன்னம் உங்களோடுக் கூடவே இருப்பதாக.




இலவசம்! இலவசம்! இப்பொழுது

இயேசுவை தினம் பார்க்கிறேன் E - Publication பத்திரிக்கையை நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் இணையதளம், ஊழிய வளைதள பகங்களிலும் மற்றும் உங்கள் What's app-ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்!. What's app-ல் பெற 944 28 00 449 என்ற எண்ணிற்கு "Send Magazine" என Type செய்தால் உடனடியாக உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும். இணையதளம் மற்றும் சமூக வளைதளங்களில் பெற www.jesuslives.in/resources Facebook, Youtube ,Instagram & jesuslives.in பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.



# KGF







# நற்செய்தி பெருவிழா கூட்டங்கள்.

கடந்த மாதம் 6,7,8 ஆகிய தேதிகளில் கர்நாடகா மாநிலத்திலுள்ள **K G F**-ல் வைத்து நடைபெற்ற மாலை கூட்டங்களிலும், 7-ஆம் தேதி காலையில் நடைபெற்ற உபவாச ஜெபத்திலும், ஞாயிற்றுகிழமை சபை ஆராதனைகளிலும் திரளான ஜனங்கள் வந்து கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லவும், அநேகர் தேவனுடைய வார்த்தையினால் பெலப்படவும், சரீரத்தில் விடுதலையையும், சுகத்தையும் பெற்றுச் செல்ல தேவன் ஜனங்களுக்குக் கிருபை செய்தார். சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்களையும், சகோதரி. கலாவின்சென்ட்ராஜ் அவர்களையும் இக்கூட்டங்களில் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். அன்பான பாஸ்டர். பால்பில்லிகிரஹாம் அவர்கள் கூட்டங்களை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

# வால்பாறை




## விடுதலைப் பெருவிழா கூட்டங்கள்



கடந்த ஏப்ரல் மாதம் 22,23, ஆகிய தேதிகளில் வால்பாறையில் உள்ள **M K S** மண்டபத்தில் வைத்து மாலை கூட்டங்களும், 23-ஆம் தேதி காலையில் விசேஷித்த உபவாச ஜெபமும் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். அநேக ஜனங்களும், தேவஊழியர்களும் வந்து இக்கூட்டங்களில் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையினால் தொடப்பட்டார்கள், ஆவியில் பெலனடைந்தார்கள். ஞாயிற்றுகிழமை காலை பரிசுத்த திருத்துவ ஆலயத்தில் வைத்து நடைபெற்ற ஆராதனையிலும் தேவன் திரளான ஜனங்களை அழைத்து வந்து ஆசீர்வதித்தார். இக்கூட்டங்களில் சகோதரரையும், சகோதரியையும் தேவன் வார்த்தையினாலும், வல்லமையினாலும் நிரப்பிப் பயன்படுத்தினார். இக்கூட்டங்களை சுவி. அந்தோனிசாமி அவர்கள் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். அவர்களையும், அவர்கள் ஊழியங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.



# வெற்றியோ? தோல்வியோ? இருக்கின்றதோ இல்லையோ, விட்டுவிடாதிருங்கள்! நம்பிக்கையை!

சகோதரி.பிரேமா டேவிட்

கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்?.....இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே ரோமர் 8:37. ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். எபிரே 10:35. கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே என்ன நடந்தாலும் நம்மில் அன்பு கூர்ந்து, அனைத்திலும் பெரும் வெற்றியை நமக்குத் தருகிற நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இரு கைகளும், இரு கால்களும் இல்லாதவராக ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்னில் நிக்கோலஸ் ஜேம்ஸ் பிறந்தார். கால்கள் இருக்க வேண்டிய இடத்தில் பாதமும் இரண்டு விரல்களுமே இருந்தது. இவ்வித உடல் குறைபாட்டைத் தவிர, ஆரோக்கியமாகவே இவர் இருந்தார். இவர் பிறந்தவுடன் அம்மா, அப்பாவால் முதலில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் Disabled child-ஆகப் பார்க்காமல் Special Child-ஆகவே தேவன் தங்களுக்குத் தந்ததாகவே அவரின் தாயும், தகப்பனும் அவரை வளர்த்தார்கள். இயேசு என்னை நேசிக்கிறார் என்ற பாடலை ஞாயிறு தோறும் சிறுவயது முதல் பாடினாலும் இயேசு என்னை நேசித்திருந்தால் ஏன் இப்படி கையும், காலுமில்லாதவனாய் என்னைப் பிறக்க வைக்க வேண்டும். கடவுள் அற்புதங்களைச் செய்வார் என்றால் ஏன்? எனக்கு கையையும், காலையும் கொடுத்து என் வேதனையைப் போக்கக் கூடாது தேவன் என்னுடைய எந்த ஜெபத்திற்கும் பதில் கொடுக்கவில்லை. கடவுள் என்று ஒருவர் இல்லை என்று ஜேம்ஸ் நினைக்கத் தொடங்கினார். அவருடைய 8 வயது முதல் 12 வயது வரை அவருக்கு கடினமான நாட்களாகவே இருந்தது.

அவருடைய பள்ளியில் முதல் மாற்றுத்திறனாளி அவரே. கையும், காலுமில்லாதவனாய் இருசக்கர நாற்கலியில் அமர்ந்து செல்லும் போது எல்லாருடைய கவனமும், பார்வையும் அவர் மீதே இருந்தது. அதனால் தன்மீது அவருக்கே வெறுப்பாயிருந்தது. பரியாசமும், கேலியும் மனச்சோர்வடையப் பண்ணிற்று. தனிமையை உணர்ந்து 10 வயதில் தற்கொலை செய்ய முயற்சி செய்து தண்ணீர் தொட்டியில் 3 முறை விழுந்தார். மூன்றாவது முறை கல்லறையில் நின்று அவருக்காய் பெற்றோர் அழுவது போலிருந்தது. அப்படியொரு வேதனையை பெற்றோர்களுக்கு கொடுக்கக் கூடாது என்று அதைக் கைவிட்டார். எவ்வளவோ பணமோ, படிப்போ, நண்பர்களோ, வாழ்க்கைக்கு தேவையான எந்தப் பொருடகளோ துளியும் அவரை சந்தோஷப்படுத்த முடியவில்லை. அவரால் மனச்சோர்விலிருந்து வெளியே வரவும் முடியவில்லை. இந்நிலையில் அவரது 15-வது வயதில் தேவன் அவருடைய ஜெபத்தைக் கேட்டார். யோவான் 9-ஆம் அதிகாரத்தை வாசித்துக் கொண்டிருந்த போது பிறவிக் குருடனைக் குறித்து அங்கே எழுதப்பட்டிருந்தது. அந்த அதிகாரத்தில் இவருடைய வாழ்க்கைக் கஷ்டத்தைப் போலவே பிறவிக் குருடனுடைய நிலையும் இருந்தது. அந்தக் குருடனின் கஷ்டத்தை இவர் உணர்ந்தார். மக்கள் அவன் குருடனாய் ஏன்? பிறந்தான் என்று இயேசுவைப் பார்த்துக் கேட்டனர். அதற்கு அவர் தேவமகிமையை வெளிப்படுத்துவதற்காகவே இவன் இப்படிப் பிறந்தான் என்றார். (யோவான் 9:2,3). அவருக்குள்ளே ஒரு விசுவாசம் வந்தது. அந்த வசனத்தைக் குறித்த அறிவு அவருக்குள்ளே விசுவாசத்தைக் கொடுத்தது.

விசுவாசம் என்பது நமக்குள்ளே நாம் உருவாக்கிக் கொள்ளுவது அல்ல. அது தேவனிடத்திலிருந்து வருகிற ஈவு. தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் (வசனத்தைக்) கேட்கும் போது நமக்குள்ளே தேவனிடத்திலிருந்து வருகிற விசுவாசம் உருவாகுகிறது. (ரோமர் 10:17) அதுவே அவர் வாழ்க்கையை மாற்றியது. இயேசு அவர் மனதை குணமாக்கினார். இயேசுவின் கையில் அவர் ஒரு கருவியாய் இருந்து, தேவனின் பலம் இவருடைய பலமாக அற்புதமாய் வந்து நிரப்புவதை உணர்ந்தார். அற்புதமாக உலகின் பல்வேறு இடங்களில் சென்று சாட்சி கூறி வருகிறார். தேவனால் தனக்கு ஒரு அற்புதம் நடந்து கைகளும், கால்களும் உடையவனாய் நான் சாட்சி சொன்னாலும், இப்படி கை, கால் இல்லாமலே முகத்தில் புன்னகையோடு என்னால் வல்லமையாய் சாட்சி சொல்ல முடியாது என்பதற்கு என் சாட்சியே மிகப்பெரிய சாட்சி என்று அவர் கூறும்போது சொல்கிறார். என்னைப் போல ஏதாவது குறையுள்ளவர்கள் இருப்பீர்களானால் நன்றாய் கேளுங்கள். ஆண்டவர் என்னை ஒரு நோக்கமில்லாமல் படைத்து விட்டார். என்னால் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களோ? கை கால் இல்லாத என்னையே அவருடைய கை காலாக பயன்படுத்த முடியுமானால் உங்களையும் பயன்படுத்த முடியும். ரோமர் 8:28-ன்படி சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. என்னுடைய இயலாமை தான் என் கஷ்டம் என நினைத்தேன், உன்னுடைய இயலாமை உன்னுடைய பிரச்சனை அல்லவே அல்ல. எல்லாவற்றையும் நன்மைக்காகவே செய்கிறார் என்ற சிந்தை இல்லாமலிருப்பதே உனக்குப் பிரச்சனை. நம் தேவன் சர்வ வல்லமையுள்ளவர், மிகவும் பெரியவர், நம் வாழ்வின் எந்த மோசமான நிலைமையையும், காரியத்தையும் மிகவும் நன்மையாய் மாற்ற அவரால் முடியும். நான் கைகளும், கால்களும் இல்லாமல் பிறந்திருப்பது ஏதோ ஒரு ஆத்துமாவுக்கு, இரட்சிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தால் எனக்கு கால்களும், கைகளும் வேண்டாம். ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட்டால் போதும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்களின் தற்போதைய நிலைமை என்ன? உங்கள் உள்ளத்தின் ஆறாத காயங்களா? சரீரத்தில் குறைபாடா? படிப்பு, வேலை, திருமணம்......எதிலும், எல்லாவற்றிலும் வெற்றியா? தோல்வியா? வறுமையா? வியாதியா?.... எதுவாயினும் நிக்கோலஸ் ஜேம்ஸ், பவுலைப் போல இவையெல்லாவற்றின் மத்தியிலும் இயேசு என்னை நேசிக்கிறார் என்பதை ஏற்றுக் கொண்டு அவரில் அன்பு கூருங்கள். ஏன் பிறந்தேன் என கேட்காதீர்கள். இருப்பதற்கு சாகலாம் என்று தவறான யோசனைக்கும், முடிவுக்கும் செல்லாதீர்கள்.




அவருடைய வார்த்தையை நம்புங்கள். சகலமும் நன்மையாய் மாறிவிடும். செய்வதை முழுபலத்தோடு செய்யுங்கள். ஜேம்ஸ் தனது இடது பண்ணைப்பழகினார், டென்னிஸ் விளையாடுவது, வாத்தியக்கருவி வாசித்தல்......பள்ளியின் ஏழாவது ஆண்டில் பள்ளி மாணவத் தலைவனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பல பட்டப்படிப்புகளைப் படித்து Life with out limbs-என்ற தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து உலகெங்கும் சிறந்த உற்சாகமூட்டும் பேச்சாளராக, சிறந்த பிரசங்கியாராக இருக்கிறார். இவருக்குத் திருமணமாகி 4 குழந்தைகள் உண்டு. உங்களுக்கும் ஒரு எதிர்காலம் இருக்கிறது. நிச்சயமாகவே முடிவு உண்டு, உன் (கர்த்தர் மேலுள்ள) நம்பிக்கை வீண்போகாது. நீதி கர்த்தருடைய பலம், உங்களின் பலமாக வந்து நிரப்பும். உங்களைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே, எல்லாவற்றையுஞ்செய்ய உங்களுக்குப் பெலனுண்டு.(நீதி 23:18, பிலி 4:13) கர்த்தர் தாமே உங்களைக் கரம் பிடித்து நடத்துவாராக.


ஜெப உதவிக்கு
1800 309 9333
+91 944 28 00 447
+91 944 28 00 449
மின்னஞ்சல்
prayers@jesuslives.in






# நீ சிறந்தவன்(ள்)

# YOU ARE SPECIAL

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!,

பிறக்கும்போதே கண்ணுத் தெரியாம பிறந்த ஒரு அண்ணனைப் பார்த்த சீஷர்கள், இயேசப்பாகிட்ட கேட்டாங்க, இவன் செஞ்ச பாவமா? இவன் அம்மா, அப்பா செஞ்ச பாவமா? யார் செய்த பாவம் இவன் இப்படிக் குருடனாய் பிறந்திருக்கிறானே என்றார்கள். அதுக்கு இயேசப்பா, இவன் செஞ்ச பாவமுமில்ல, இவன் பெற்றோர் செஞ்ச பாவமுமில்ல, இவன் மூலம் தேவனுடைய மகிமை வெளிப்படுவதற்கே என்றார். கண்ணுத்தெரியாத நிறைய பேருக்கு பார்வை கொடுத்த இயேசப்பா, இவருக்கும் பார்வை கொடுத்தாங்க. எப்படி? என்று தானே கேட்கிறீங்க, இயேசப்பா தரையில மண்மேலே உமிழ்நீரைத் துப்பி, அதைக் குழப்பி, அந்த மண்ணையெடுத்து அந்த அண்ணுடைய கண்கள் மேலேப் பூசிவிட்டு, நீ போய் சீலோவாம் என்கிற குளத்தில போய் கழுவுன்னு சொன்னார். அந்த அண்ணனும் அப்படியே போய் அங்கே கண்களைக் கழுவினாங்க என்ன ஆச்சரியம்! கண்ணு இரண்டும் நல்லா தெரிஞ்சிருச்சு. உடனே இயேசப்பா கிட்ட திரும்ப வந்தாங்க, அந்த அண்ணனைப் பார்த்த எல்லாரும்  அவன் அந்தக் குருடன் தானே, அவன் அங்கே பிச்சை எடுத்துகிட்டு இருந்தவன் தானே என்றார்கள். அதற்கு ஒரு சிலர் ஆமாமா, அவன் தான் என்றும், அவன் மாதிரி இருக்குதுனும் சொல்லிக் கொண்டார்கள். அதற்கு அவன் நான் தான் அவன் இயேசப்பா இப்படி மண்ணைத் தடவி என்னைய கழுவச் சொன்னாங்க, பார்வைக் கிடைத்துவிட்டது என்று தேவனை மகிமைப்படுத்தினான். இயேசப்பாகிட்ட வந்த நிறைய பேருக்கு சுகம் கிடைச்சிருக்கு, கண்ணுத் தெரிஞ்சிருக்கு, காது கேட்டிருக்கு, கை,காலெல்லாம் சரியாயிருக்கு, அதனால யாருக்காவது முடியலைன்னா இயேசப்பாகிட்ட (பிரையர்) Prayer பண்ணுங்க இயேசப்பா நிச்சயம் சரியாக்கிடுவாங்க. அப்புறம் குட்டீஸ் உங்க வீட்டுப்பக்கத்தில, ஸ்கூல்ல, சர்ச்சுல யாராவது கண்ணுத் தெரியாம, சாய்ச்சு நடந்து, கொஞ்சம் குறைபாடா, குண்டா, ஒல்லியா இருந்தா அவங்கள கண்ணு தெரியாதவன்.... என்று கேலிபண்ணவோ, கஷ்டப்படுத்தவோ கூடாது. அவுங்களத்தான் இயேசப்பாவுக்கு ரொம்ப பிடிக்கும். அவுங்களுக்குத்தான் விசேஷித்த ஞானம், திறமையை தேவன் தந்து ஆசீர்வதிப்பாங்க.
உங்களுக்குக்கூட ஏதாவது குறையிருந்தா இயேசப்பாகிட்ட (பிரையர்) Prayer பண்ணுங்க எல்லாம் சரியாயிடும். இல்லைன்னா அதை பெரிசா எடுத்துக்காம, நினைக்காம என்ன செய்யத் தெரியுமோ அதை நல்லா, சிறப்பா செய்யுங்க. இயேசப்பா உங்களுக்கு ஞானமும், பெலனும் தருவாங்க. என்ன குட்டீஸ் சரியா!.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா யாராவது உடலிலேயோ, அறிவிலேயோ குறைபாட்டோடு இருந்தால் அவங்கள கேலிபண்ணாமல், அவங்களிடம் அன்பா பேசி, உதவி செய்யும் பிள்ளையாய் என்னை மாற்றுங்கப்பா. நன்றி இயேசப்பா ஆமென்.



## மனப்பாட வசனம்

நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். லூக்கா 12:7






# வாசகர்கள் கவனத்திற்கு !

வாசகர்கள் வசிப்பதற்கு எளிதாக நமது இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழ் கலரில் அச்சஅடிக்கப்பட்டு வெளிவர தேவன் கிருபைசெய்தார்.
உங்கள் சந்தாவை இனி G-PAY மூலம் செலுத்தலாம் மற்றும் இந்த ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள். +91 944 3009 333

# நம்பிக்கையின் தேவன் செய்த நன்மைகளில் சில



சாட்சி பகுதி

**சகோதரி. பாப்பாத்தி கொடைக்கானல்**

நான் கடந்த மாதத்தில் என் சகோதரியின் கண் ஆப்ரேஷன் நல்ல முறையில் நடக்கவும், கண்பார்வை தெளிவாக தெரியவும் ஜெபிக்குமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். சகோதரர் வின்சென்ட்ராஜ் அவர்கள் என் அக்காவின் சுகத்திற்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். தேவன்
ஜெபத்தைக் கேட்டார் ஆப்ரேஷன் எந்த பிரச்சனையும் இல்லாமல் நல்ல முறையில் நடந்து முடியவும், நன்றாகப் பார்க்கவும் தேவன் கிருபை செய்திருக்கிறார். தற்போது கண்ணில் எந்த பிரச்சனையும் இல்லை தேவன் சுகம் கொடுத்தார். அவருக்கே மகிமை.

**சகோதரி. ராஜரத்தினமேரி பெங்களூர்**

நான் மிகவும் பெலவீனப்பட்டு, தொடர்ந்து காய்ச்சலினாலும் கஷ்டப்பட்டேன். மருந்து மாத்திரைகள் எடுத்தும் காய்ச்சல் நிற்கவில்லை. மனம் உடைந்து போன நிலையில் யூடியூப்பில் செய்தியாவது பார்க்கலாம், கேட்கலாம் என்று நினைத்து பார்த்துக் கொண்டிருந்த போது தற்செயலாக நான் இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் ஒளிபரப்பாகும் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் என்ற நிகழ்சசியைப் பார்த்தேன். அதில் பாடப்பட்ட பாடல்கள் மூலம் தேவன் என்னோடு பேசினார் எனக்குள் விசுவாசம் வந்தது. நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஜெபித்தேன். இயேசப்பா இந்த நிகழ்ச்சியை நான் பார்த்து முடிப்பதற்குள்ளாக எனக்கு இந்த காய்ச்சளிலிருந்து சுகம் தாங்க என்று ஜெபித்தேன் தேவன் நல்லவர், அற்புதம் செய்பவர் அந்த நிகழ்ச்சி முடியும் போது எனக்கு காய்ச்சளிலிருந்து விடுதலை தந்தார். நான் சுகம் பெற்றேன். இயேசப்பாவுக்கு கோடான கோடி நன்றி. தொடர்ந்து கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சியைப் பார்க்கிறேன் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது.

**சகோதரி. ரோஸ்லின் உதயகுமார் கோவை.**

என் அப்பாவும், தம்பியும் வேலை செய்த இடத்தில் அநேகர் உடன்வேலை செய்தார்கள். மாலையில் அந்த வீட்டில் பொருளைக் காணவில்லை என்று அங்குள்ளவர்கள் மேல் சந்தேகப்பட்டு காவல்துறையினரை
வரவழைத்தார்கள். காவல்துறையினரைப் பார்த்த உடன் எல்லாரும் ஓடினார்களாம், அப்போழுது என் அப்பாவும், தம்பியும் ஓடவும் காவல்துறையினர் சந்தேகப்பட்டு அவர்களை கைது செய்தார்கள். போலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கொண்டு வீட்டிற்கு விடமாட்டோம் என்று பிரச்சனை செய்தார்கள். நாங்கள் எவ்வளவோ பேசியும், கெஞ்சியும், எடுக்கவில்லை என்று சொல்லியும் அவர்கள் விடவே இல்லை. நான் இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் ஜெபித்து பயப்படாதீங் இயேசப்பா உண்மையை வெளிப்படச் செய்வார். அப்பாவும் தம்பியும் கட்டாயம் நாளை வீட்டிற்கு வந்து விடுவார்கள் என்று என்னைத் தைரியப்படுத்தினார்கள். மறுநாள் காவல்துறையினர் எங்க அப்பா வீட்டிற்கு மோப்ப நாய்களுடன் வந்து சோதனை செய்தார்கள். ஒன்றும் இல்லை என்று அறிந்தார்கள். அப்பாவும், தம்பியும் சொல்வது உண்மைதான் என்று அறிந்து அன்றே விடுதலை செய்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்த இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரர். முத்து தஞ்சாவூர்.**

ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டியில் உள்ள வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து நடைபெற்ற விசேஷித்த ஆசீர்வாதக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அந்த கூட்டத்தில் விரைவில் எனக்கு அரசு வேலை கிடைக்கவும், தடைகள் விலகவும் கண்ணீருடன் ஜெபித்துவிட்டு, விசுவாசத்தோடு வீட்டிற்கு வந்தேன். மறுவாரத்திலேயே தேவன் தடைகளை அகற்றி, அதிகாரிகள் உள்ளங்களில் கிரியை செய்து வீட்டிற்கு வேலைக்கான கடிதம் வரவும், குறித்த நாளில் நான் வேலையில் போய் சேரவும் தேவன் கிருபை செய்தார். என் தேவன் பெரியவர் அவராலே எல்லாம் கூடும். அவர் மேல் நம்பிக்கை வைத்த யாரையும் அவர் கைவிடமாட்டார், வெட்கப்பட்டுப் போகவும் விடமாட்டார் என்பதற்கு நானும் ஒரு சாட்சி. எனக்கு அற்புதம் செய்து, என் தலையை உயர்த்தி, என் ஜனங்களுக்கு முன்பாக என்னை மேன்மைப்படுத்தின தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.




**இயேசு வாழ்கிறார்**
**ஊழியத்தோடு இணைந்து**
**ஊழியம் செய்ய**
**அர்ப்பணமுள்ள உடன்**
**ஊழியர்கள் "அவசர தேவை"**

- Data Entry Operators
- Prayer Warriors
- Video Editors
- Social Media Developers
- Office Administrator
- Keyboardist
- Stenographers
- Motion Graphics Designers
- Office Assistants
- Drivers
- Cook
- Magazine Designer's

மதுரை, செம்பட்டி, சென்னை ஊழிய அலுவலகங்களில் ஊழிய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்

வாசகர்கள் கவனத்திற்கு!! கடைசி கால சுவிசேஷ பணியை மேற்கொள்வதற்கு உங்களுக்கு தெரிந்தவர்களை இப்பணிகளுக்கு பரிந்துரை செய்யுங்கள்
மேலும் அலுவலக விவரங்களுக்கு மட்டும் +91 7825 04 7825

## மீடியா மற்றும் ஐடி துறையின் சிறப்பு பயிற்சி வகுப்புகள் (3 மாதங்கள் மட்டும்)
Training Institute

**மீடியா துறையில்**

Camera, Editing, Program Production, Direction, Out door production ,Photoshop, Graphics, Motion Graphics மற்றும் மீடியா துறை சார்ந்த நுணுக்கங்கள் கற்று தரப்படும்

**ஐடி துறையில்**

Website Development. Website management, Android and iOS development etc.

**கல்வி தகுதி:**

ஏதேனும் பட்டப்படிப்பு (அல்லது) +2 (படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறன் உள்ளவர்களுக்கு)

(உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்) பயிற்சி முடித்தபின் சான்றிதல் வழங்கப்படும்

ஊழிய வாஞ்சையுடன், பயிற்சியில சிறந்துவிளங்குவோர்க்கு நமது சென்னை மற்றும் மதுரை அலுவலகத்தில் உடனடி வேலை வாய்ப்பு வழங்கப்படும்.



ஆன்லைன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க
www.dprince.in/training

மேலும் விவரங்களுக்கு:
+91 7825 04 7825

# நடப்பு செய்திகள்



## வீட்டை அபகரித்த மகன் தந்தையின் பாதத்தை கழுவி மன்னிப்பு கேளுங்க! நீதிமன்றம் சுவாரசிய உத்தரவு

இந்தியாவில் உள்ள நீதிமன்றங்களில் சில வித்தியாசமான தீர்ப்புகள் வழங்கப்படுவது உண்டு. மேலும் தீர்ப்புகளின் போது நீதிபதிகள் கூறும் கருத்துகளும் கவனத்தை ஈர்க்கும் வகையில் இருக்கும். அந்த வகையில் மத்திய பிரதேச மாநிலத்தில் வீட்டை அபகரிக்க தந்தையை தாக்கிய மகனுக்கு நீதிமன்றம் வினோத தீர்ப்பு வழங்கி உள்ளது. மத்திய பிரதேச மாநிலம் ஜபால்பூர் அருகே உள்ள ஹிரிடே நகரில் வசித்து வருபவர் ஆனந்த் கிரி (வயது 80). இவரது மகன் தாமேஷ்வர் கிரி. இவருக்கு திருமணம் ஆகி சிலோசனா என்ற மனைவி உள்ளார். இந்நிலையில் ஆனந்த்கிரியின் நிலத்தை மகன் தாமேஷ் கிரி விற்பனை செய்து பணத்தை வைத்து கொண்டார். தற்போது அவர் ஆனந்த்கிரியின் வீடு மீது கண் வைத்துள்ளார். அதாவது மாநில அரசின் திட்டத்தின் மூலம் 750 சதுரஅடி நிலத்தில் உள்ள ஆனந்த்கிரியின் வீட்டை கைப்பற்ற தாமேஷ்வர் திட்டமிட்டார். இதனால் வீட்டை தனது பெயரில் எழுதி வைக்கும்படி அவர் தனது தந்தையிடம் வலியுறுத்தி வந்தார். இதற்கு அவர் ஆனந்த் கிரி மறுப்பு தெரிவித்தார். இதனால் கோபமடைந்த தாமேஷ்வர் கிரி மனைவி சிலோசனாவுடன் சேர்ந்து கொண்டு தந்தை ஆனந்த் கிரியை தாக்கி வீட்டில் இருந்து வெளியேற்றினார். மேலும் வீட்டை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளை தாமேஷ்வர் கிரி மேற்கொண்டு வந்தார். இதற்கிடையே வீடு இன்றி தவித்த ஆனந்த் கிரி நீதிமன்றத்தை அணுகினார். ஜபால்பூர் அருகே உள்ள சிகோரா எஸ் டி எம் நீதிமன்றத்தில் அவர் மனு செய்தார். அந்த மனுவில், ""எனது வீட்டை விற்பனை செய்யும் நோக்கத்தில் மகன் தாமேஷ்வர் கிரி, மருமகள் சிலோசனா ஆகியோர் என்னை அடித்து துரத்திவிட்டுள்ளனர். அவர்களால் எனது உயிருக்கு ஆபத்து உள்ளது. ஏற்கனவே எனது கழுத்தை நெரித்து தாமேஷ்வர் கிரி கொலை செய்ய முயன்றுள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளேன். முதியோர் காப்பகத்தில் எனக்கு வாழ விருப்பமில்லை. சொந்தமாக கட்டிய வீட்டில் தான் கடைசி காலத்தை கடத்த விரும்புகிறேன். தற்போது அது முடியாததால் வாழ்வதை விட சாவதே மேல் என்ற எண்ணமும் தோன்றுகிறது" என குறிப்பிட்டு இருந்தார். இந்த மனு மீது நீதிபதி ஆசிஷ் பாண்டே விசாரித்தார். தாமேஷ்வர் கிரிக்கு சம்மன் அனுப்பப்பபட்டது. அவர் தனது மனைவியுடன் நீதிமன்றத்தில் ஆஜரானார். இதையடுத்து தாமேஷ்வர் கிரியின் செயலுக்கு நீதிபதி ஆசிஷ் பாண்டே கடுமையாக கண்டித்தார். மேலும் தந்தையிடம் மன்னிப்பு கோரி அவரிடம் வீட்டை ஒப்படைக்க வேண்டும் என அறிவுறுத்தினார். அதோடு பெற்ற தந்தை என கூட பார்க்காமல் ஆனந்த்கிரியை தாக்கி வீட்டில் இருந்து வெளியேற்றிய செயலுக்கு தண்டனையாக அனைவரின் கண்முன்னே அவரது பாதங்களை கழுவ வேண்டும் என தாமேஷ்வர் கிரிக்கு நீதிபதி ஆசிஷ் பாண்டே உத்தரவிட்டார். இதையடுத்து தாமேஷ்வர் கிரி தனது தந்தை ஆனந்த் கிரியிடம் மன்னிப்பு கோரினார். மேலும் இனி இதுபோன்ற செயலை செய்ய மாட்டேன். வீட்டை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன் என தெரிவித்தார். அதோடு அனைவரின் கண்முன் தனது தந்தையின் பாதங்களை கழுவினார். இதனால் மனம்மாறிய ஆனந்த் கிரி தனது மகன் மீது எந்த நடவடிக்கை எடுக்க வேண்டாம் என கூறினார். இதற்கு நீதிமன்றம் ஒப்புக்கொண்ட நிலையில் ஆனந்த்கிரி தனது மகன் தாமேஷ்வர் கிரியுடன் ஒன்றாக வீட்டுக்கு சென்றார். இந்த சம்பவம் நீதிமன்றத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**

WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S


SUBSCRIBE OUR

# YOUTUBE

CHANNEL

**JESUS LIVES MINISTRIES**



EVG.KALAVINCENTRAJ



EVG.VINCENTRAJ

## வார நிகழ்ச்சிகள்

**கர்த்தாவே என்னை கைதூக்கிவிடும்**

MON - FRI @ 9:00 - 9:45 PM




**சுவிசேஷ ஒளி**

SATURDAY @ 9:30 PM




## அனுதின நிகழ்ச்சி

**இயேசுவை தினம் பார்ப்போம்**

DAILY @ 6AM




**SUBSCRIBE AND WATCH ON JESUS LIVES MINISTRIES**


**TO**

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.